10.02.2026

O.S.No.180/2023

PW2– ராமசந்திரன்– த/பெ. வெற்றிவேல்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நானும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இருதரப்பினரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. 1,2 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு கிணறு சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

3. கிணற்றில் பதிக்கப்பட்ட எலெக்ட்ரிக் மின் மோட்டாரை யார் இறைப்பது என்பது சம்மந்தமாகத்தான் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

4. அந்த பிரச்சனையால் 1ம் பிரதிவாதி கிணற்றில் தனியாக அவர் சொந்த செலவில் ஒரு மின் மோட்டார் அமைத்துக் கொண்டார் என்றால் சரிதான்.

5. 1ம் பிரதிவாதி தனியாக மின் மோட்டார் வைத்த பின் பிரச்சனை முடிந்ததா என்றால் இல்லை.

6. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

7. 1ம் பிரதிவாதி வசம் உள்ள பிராது 2ம் இனச் சொத்தை 3ம் வாதியாகிற என் வசம் கொடுக்கவேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. 2ம் இனச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என சுவாதீன மீட்பு கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. 2ம் இனச் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 423ல் உள்ளது. அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4 சென்ட் ஆகும்.

10. 2ம் இனச் சொத்திற்கு கிழக்கே யார் இடம் உள்ளது என்றால் காமராஜ் இடம் உள்ளது. தெற்கே, மேற்கே மற்றும் வடக்கே யார் இடம் உள்ளது என்றால் தெரியாது.

11. என் தகப்பனார் பெயர் என்ன என்றால் வெற்றிவேல். என் தகப்பனார் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை.

12. என் தகப்பனாருக்கு 4 ஆண் மற்றும் 3 பெண் வாரிசுகள் என்றால் சரிதான்.

13. என் தகப்பனார் உயிருடன் இருந்த போது எங்களுக்குள் எந்த பாகமும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

14. என் தகப்பனாருக்கு வீடு மற்றும் விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான்.

15. என் தகப்பனார் பெயருக்கு அவருடைய சொத்தை பொறுத்து பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

16. என் தகப்பனார் வெற்றிவேலின் தகப்பனார் பெயர் என்ன என்றால் குத்தாலிங்கம் ஆகும்.

17. குத்தாலிங்கத்திற்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர் என்றால் 4 ஆண் மற்றும் 2 பெண் பிள்ளைகள் உள்ளனர்.

18. குத்தாலிங்கத்தின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். சாட்சி தற்போது வாரிசு சான்றிதழ் இல்லை என்று பதிலளித்தார்.

19. பிராது தபசில் 2ம் இனச் சொத்து குத்தாலிங்க நாடாருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

20. குத்தாலிங்கம் பெயரில் என்ன ஆவணம் உள்ளது என்றால் பத்திரம் உள்ளது.

21. பத்திரம் என் வசம் உள்ளதா என்றால் இல்லை. 2ம் இனச் சொத்திற்கு பட்டா என் பெயரிலும் என் அப்பா பெயரிலும் இல்லை என்றால் சரிதான்.

22. என்னிடம் காண்பிக்கப்படுவது 2ம் இனச் சொத்திற்கான இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா என்றால் சரிதான். 2ம்

இனச் சொத்தின் சர்வே எண்.473/9–ற்கான பட்டா 2 பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.7258 பி.வா.சா.ஆ.1 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

23. பிராது 2ம் இனச் சொத்தும் அதற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தும் 35 சென்ட் இடம் என்றால் சரியல்ல 36 சென்ட் ஆகும்.

24. 2ம் இனச் சொத்தையும் அதற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தையும் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு நன்கொடை கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

25. வா.சா.ஆ.1 ஆவணம் பிராது 2ம் இனச் சொத்திற்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

26. பிரதிவாதிகள் 2ம் இனச் சொத்தில் என்ன பயிர் செய்து வருகிறார் என்றால் தென்னை மரம் வைத்து பயிர் செய்து வருகிறார்.

27. பிராது 2ம் இனச் சொத்தாக நான் கூறுவதும் அதனைச் சுற்றியுள்ள 35 சென்டும் ஆதியில் குழந்தையம்மாள் மற்றும் ஆறுமுக பண்டிதருக்கு உரிமையும் பாத்தியமும் ஆனது என்றால் சரியல்ல.

28. குழந்தையம்மாளும், ஆறுமுக பண்டிதரும் காலமான பின் அவரின் வாரிசுகள் வா.சா.ஆ.3ன் மூலம் கணபதி நாடாருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

29. கணபதி நாடார் வா.சா.ஆ.4ன் மூலம் கணேசன் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். கணேசன் நாடார் வா.சா.ஆ.5ன் மூலம் வேலாயுதம் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான்.

30. வேலாயுதம் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.7ன் மூலம் கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு சரிதான்.

31. 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.10ன் மூலம் 2ம் பிரதிவாதிக்கு நன்கொடை ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

32. வா.சா.ஆ.3,4,5,7 மற்றும் 10 ஆகிய ஆவணங்கள் எழுதப்பட்ட நாளிலே என் கவனத்திற்கு வந்தது என்றால் சரிதான்.

33. இது சம்மந்தமாக பிரதிவாதியின் மீது காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் முருகையா மீது மட்டும் புகார் கொடுத்தோம். என்ன புகார் கொடுக்கப்பட்டது என்றால் 4 சென்ட் இடத்தை மீண்டும் என்னிடம் கொடுக்கவேண்டி புகார் கொடுத்தேன். என் புகாரை போலீசார் பொய் என முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

34. பிராது 2ம் இனச் சொத்து எனக்கு பாத்தியமில்லாததால் என் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி